**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 138/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 3 |
| Name : | திருமதி. மாலதி |
| Father's Name/Husband Name: | திரு. சுரேஷ் |
| Village : | சோமண்டாபுதூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 29 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 ருக்குமணி எனது அக்கா. அ.சா.2 அலமேலு எனது தாயார். எதிரிகள் அனைவரையும் தெரியும். கடந்த 01.07.2024 அன்று இரவு சுமார் 10 மணியளவில் என் அக்கா ருக்குமணி மருந்து குடித்துவிட்டதாக எனது அண்ணன் போன் மூலமாக எனக்கு தகவல் சொன்னார். தகவல் கிடைத்து நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மறுநாள் நான் என் அக்காவிடம் விசாரித்தேன். நான் விசாரித்த போது என் அக்கா எதிரி சுந்தரத்திடம் ரூபாய் 30 லட்சத்திற்கு சீட்டு கட்டியிருந்ததாகவும் எதிரி சுந்தரத்திற்கு பணம் தர வேண்டியது இருந்ததாகவும் என் அக்கா டைம் கேட்டதாகவும் எதிரி சுந்தரம் அழைத்ததாகவும் என் அக்கா சென்றபோது எதிரிகள் மூவரும் என் அக்காவை திட்டியதாகவும் ரொம்ப அசிங்கபடுத்தியதாகவும் தனக்கு மிகவும் கஷ்டமாக இருந்ததாகவும் அதனால் மருந்து குடித்துவிட்டதாக என்

அக்கா என்னிடம் சொன்னார். என் அக்கா அளித்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 01.07.2024 அன்று நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் சம்பவத்தன்று சோமண்டாபுதூர் கிராமத்தில் இருந்தேன் என்றால் சரிதான். என் அக்கா தான் என்னிடம் சீட்டு தவணை தொகையை எதிரிகளுக்கு கொடுக்கவில்லை என்றும் அதற்கு டைம் கேட்டதாக சொன்னாள். எதிரி சுந்தரம் பொது இடத்தில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது அம்மாவும் சீட்டுத் தொகையை கட்டி வரும் விபரத்தினை என் அக்கா என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான் மருத்துவமனையில் வந்து தெரிந்து கொண்டேன். எதிரிகள் யாரும் எனது அக்காவை திட்டவில்லை என்றாலும், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளின் நற்பெயரை கெடுப்பதற்காக எனது அக்கா கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் எந்த தேதியில் எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து நான் மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.